**நஷனல் ஜெம் அன்ட் ஜுவல்லரி அதோரொடி - லங்கா ஜேமொலொஜிகல் லபொரட்ரி (பிறைவேட்) லிமிட்டட்– 2017/2018**

---

நஷனல் ஜெம் அன்ட் ஜுவல்லரி அதோரொடி - லங்கா ஜேமொலொஜிகல் லபொரட்ரி (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2014 ஏப்ரல் 01 தொடக்கம் 2018 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கான விவகாரங்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம், 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம், வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 புத்தகங்கள் மற்றும் கணக்குகளிளைப் பேணுகை

2014 ஏப்ரல் 01 தொடக்கம் 2018 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு கம்பனியினால் பேணப்படவேண்டிய பின்வரும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள், கம்பனியினால் பேணப்பட்டிருக்கவில்லை.

- (i) காசு / வங்கி புத்தகங்கள்
- (ii) பேரேட்டுக் கணக்குகள்
- (iii) நாளேடுகள்
- (iv) வங்கி இணக்கக் கூற்றுக்கள்
- (v) தொடர்புடைய பதிவேடுகள்
- (vi) செலுத்துகை உறுதிச்சீட்டுக்கள்

## 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

கம்பனியினால் தயாரிக்கப்பட்ட 2014 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறு

| **நிதிக்கூற்றுக்களிலுள்ள வகை** | **பெறுமதி** |
|---|---|
| **சொத்துக்கள்** | **ரூபா** |
| நடைமுறைச் சொத்துக்கள் | 139,006,695 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **139,006,695** |
| **உரிமையாண்மை** | |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | 124,178,950 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 14,827,745 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | **139,006,695** |
| மொத்த வருமானம் | - |
| மொத்த செலவினம் | 257,271 |
| **பற்றாக்குறை** | **(257,271)** |

## 2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 28 தொடக்கம் 2016 யூன் 28 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிலையான வைப்பு புதுப்பித்தல் தொடர்பான அறிவித்தல் 2018 மார்ச் 31 இல் உள்ளபடியான ரூபா 862,904 தொகையான கையிலுள்ள காசுக்கான மீதி உறுதிப்படுத்தல் மற்றும் முறையே ரூபா 59,000 மற்றும் ரூபா 1,200,000 தொகையான வங்கிக் கணக்கிலிருந்து திரும்பிப்பெறப்பட்ட காசிற்கான மீதி உறுதிப்படுத்தல் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலவினம் மற்றும் மூன்று வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கான ஏனைய தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட ஏனைய ஆவணங்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்பாடும் மீளாய்வும்

2008 ஆம் ஆண்டில் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. கம்பனியின் அமைப்பு அகவிதியின் 4 ஆம் இலக்க பந்தியில் பின்வரும் நோக்கங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும், இதுவரை எவ்வித தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையினால் கம்பனி அதன் நோக்கங்களினை அடைந்திருக்கவில்லை.

(i) இரத்தினக் கற்களின் பரீட்சிப்பு மற்றும் சான்றளித்தல், விலைமதிப்புமிக்க மற்றும் அரை விலைமதிப்புமிக்க கற்கள், செயற்கை சேர்மானக் கற்கள், உலோகங்கள், தாதுப்பொருட்கள், ஆபரணங்கள் மற்றும் ஏதேனும் ஏனைய தாதுப்பொருட்கள் அல்லது ஏதேனும் பொருட்கள் போன்றவற்றினை பரீட்சிப்பதற்கு மற்றும் கருத்துரைகள், விலைமதிப்பீட்டு சான்றுப்பத்திரங்கள், அறிக்கைகள் போன்றவற்றினை விநியோகிப்பதற்கு சர்வதேச நியம தரத்திலான ஆய்வுகூடமொன்றை இலங்கையில் ஸ்தாபித்து செயற்படுத்தல்.

(ii) அறிவியல் பூர்வமான, நியாயமான மற்றும் பாகுபாடில்லாத தொழிற்பாடுகளினையுடைய நிறுவனமொன்றாக குறித்த ஆய்வுகூடத்தில் நம்பகரமான பதிலளிப்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகத்தினை இயலுமையாகக்கூடியதாக அதன் தொழிற்பாடுகளில் குறித்த ஆய்வுகூடத்தின் சுதந்திரதன்மையினை உறுதிப்படுத்தல்.

(iii) இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில்துறை மற்றும் குறித்த கைத்தொழிற்துறையில் வியாபாரத்தினை விழுமியங்களுடன் நடாத்துவதனை வலுவூட்டுதல், உளாக்கப்படுதல் மற்றும் அபிவிருத்தியினை மேம்படுத்தல்.

(iv) இரத்தினக்கற்களின் பரீட்சிப்பு, விலைமதிப்புமிக்க மற்றும் அரை விலைமதிப்புமிக்க கற்கள், செயற்கை சேர்மானக் கற்கள், உலோகங்கள், தாதுப்பொருட்கள், ஆபரணம் மற்றும் ஏதேனும் ஏனைய மூலப்பொருட்கள் அல்லது பொருட்களின் மீதான கல்விசார் மற்றும் பயிற்சி பாடநெறிகள் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துதல்.

(v) புதிய தொழில்நுட்ப அபிவிருத்தி, முறைமைகள், இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண தொழிற்துறைக்கான அமுல்படுத்தல்களுக்கு ஆராய்ச்சிகளினை நடாத்துதல்.

(vi) உடன்பிறந்த அமைப்புக்களுடன் இணைந்து, ஒத்துழைப்புடன் வேலைசெய்வதற்கு மற்றும் அவ்வாறான அமைப்புக்களுடன் சங்கமத்துடன் பரஸ்பரமான உறவினை ஸ்தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கு 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 16/1589/704/040 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தபோதிலும், அந்தப் பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கு கம்பனியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2008 மே இல் ஸ்தாபிக்கப்பட்ட கம்பனியைக் கலைத்தல்.

(ii) கம்பனிக்கு மாற்றப்பட்ட நிதிகள் மற்றும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட வட்டியினை மீளமாற்றுதல்.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட மாற்றஞ்செய்யப்பட்ட நிதிகளினைப் பயன்படுத்தி 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழ் சர்வதேசரீதியல் அங்கீகரிக்கப்பட்ட அதிநவீன உயர்-தொழில்நுட்ப ஜெம்மாலஜிக்கல் (Gemological) ஆய்வுகூடத்தினை ஸ்தாபித்தல்.

(ஆ) 2014 செப்தெம்பர் 25 இல் உள்ளபடியான வங்கி மீதி ரூபா 714,335 ஆகக் காணப்பட்ட போதிலும், உடனடியாக மாற்றக்கூடிய காசோலையொன்றின் மூலம் ரூபா 900,000 தொகையொன்று திரும்பப்பெறப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 185,665 தொகையொன்று சபை அங்கீகாரமின்றி மிகையாக வரையப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வுத் திகதி வரை வருமான வரி அல்லது வருமான வரியினைச் செலுத்துவதற்காக பதிவதற்கு கம்பனியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 31 இல் உள்ளபடியான செலுத்தவேண்டிய வருமான வரியின் மீதி மற்றும் பிடித்துவைத்தல் வரி முறையே ரூபா 14,619,695 மற்றும் 4,784,831 தொகைகள செலுத்தப்படடிராது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(ஈ) ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு 2014 செப்தெம்பர் 03 இல் நிலையான வைப்பொன்றில் முதலீடுசெய்யப்பட்ட ரூபா 137,898,698 தொகையொன்று சபை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது முதிர்ச்சிக்காலத்தின் 21 நாட்களுக்கு முன்னர் திருப்பிபெறப்பட்டிருந்தது.

நிலையான வைப்புக்களில் ரூபா 120 மில்லியனை மீளமுதலீடு செய்வதற்கு பணிப்பாளர் சபையினை உள்ளடக்கும் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், ரூபா 110 மில்லியன் தொகையொன்று மாத்திரம் அந்த திகதியில் மீள முதலீடுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகையில் ரூபா 24 மில்லியன் தொகையொன்று 4 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் மேலாக விளைவற்று தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(உ) 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 மார்ச் 31 இல் உள்ளபடியான செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 208,050 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 218,706 தொகையொன்று நிதிநிலைமைக் கூற்று திகதியின் பின்னர் கணக்காய்வு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை 2014 ஆம் ஆண்டில் 3 அலுவலகரீதியான வெளிநாட்டு சுற்றுலாக்களில் கலந்துகொண்டிருந்ததுடன்

அவற்றிற்கான செலவினங்களாக ரூபா 2,939,375 தொகையொன்று ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த சுற்றுலாக்களுக்கு தலைவர் மற்றும் ஒரு பணிப்பாளரினை தவிர பணிப்பாளர்களினால் திறைசேரி மற்றும் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றுலா நிகழ்ச்சி நிரல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் சுற்றுலாக்களின் நோக்கங்களினை வெளிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) 2010 யூலை 09 ஆந் திகதிய CA/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வடிவத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுலாப்பிரயாணத்தின் பின்னர் 2 வாரங்களுக்குள் உத்தியோகத்தர்களினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் மேற்குறித்த வெளிநாட்டு பிரயாணங்களுடன் தொடர்புபட்ட அறிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டவாறு கம்பனியின் உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தாபனக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் உபஅத்தியாயத்தின் பிரகாரம், வான்வளி மூலம் பிரயாணம் செய்யும் போது அனைத்து உத்தியோகத்தர்களும் பொருளாதார வர்க்கம் (economy class) மூலம் பிரயாணம் செய்ய வேண்டும், இந்த தேவைப்பாட்டிற்கு முரணாக, தலைவர் ஜேர்மன் மற்றும் தாய்லாந்திற்கு பிரயாணஞ்செய்யும் போது வியாபார வர்க்கம் (Business class) மூலம் பிரயாணஞ் செய்திருந்தார். அதன்விளைவொன்றாக, அந்த 2 பயணங்களுக்கு ரூபா 257,699 தொகையொன்று மிகையாக செலுத்தவேண்டியுள்ளது.

(v) 3 பணிப்பாளர்களுக்கு படியாக கையிலுள்ள காசிலிருந்து ரூபா 1,287,948 மொத்த தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் 3 வெளிநாட்டு சுற்றுலாக்களுடன் தொடர்புடைய கட்டணங்கள் மற்றும் குறித்த செலுத்துகைகள் தொடர்புடைய பெறுநர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) தாய்லாந்து மற்றும் ஜேர்மன் சுற்றுலாக்களுடன் தொடர்புடைய இணைந்த மற்றும் இடைநேர் படிகள், விமானப் பயணச்சீட்டுக் கட்டணங்கள் மற்றும் வீசா கட்டணங்கள் உள்ளடகலாக கட்டணங்கள் ரூபா 369,440 மற்றும் ரூபா 1,032,887 தொகைகள் கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளரொருவரின் சார்பில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.